மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, யார், யார் இதிலே முறையாக அங்கம் பெற்றிருக்கிறார்கள் என்ற தகவல் இல்லை. பொதுவாக தமிழ் நாட்டில் ஊனமுற்றோர்கள் என்ற அடிப்படையில் இருக்கிற எண்ணிக்கையினுடைய விகிதம் 230 ஆயிரம் ஆகும். தற்போது திட்டத்தினால் பயன் பெறுகிறவர்கள் 22 ஆயிரம் பேர்கள். படித்த உடல் ஊனமுற்றோர்கள் எண்ணிக்கை 23.9 சதவீதம் ஆகும். கல்வி அறிவு இல்லாத உடல் ஊனமுற்றோர்கள் எண்ணிக்கை 69.3 சதவீதம் ஆகும். தற்சமயம் படித்த உடல் ஊனமுற்றோர்கள் எண்ணிக்கை 5.81 சதவீதமும் ஆகும். இவர்கள் எப்படி பயிற்சி பெறுகிறார்கள் என்றால், இந்தத் திட்டம் எவ்வாறு வழி வகை செய்கிறது என்றால், உற்பத்தி தொழில் கூடம் நிறுவுவதில் இவர்கள் பயிற்சி பெறுகிறார்கள், மற்றும் தொழில் நிறுவனங்களில், அரசு போக்குவரத்து நிறுவனங்களிலே மற்றும் அரசுத் துறை பிரிண்டிங் பிரஸ்ஸிலே இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கைத்தறி நெசவுப் பயிற்சி, மற்றும் மாநில அளவிலே இருக்கிற மற்ற விசைத் துறை பயிற்சிகள், சுருட்டு, பீடி போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றன.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்தக் குழு எத்தனை ஊனமுற்றோர்களுக்குச் சலுகை தர வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதை அங்கீகரித்த அரசு எத்தனை பேர்களுக்கு இது வரையில் செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அவர் அளித்த பதில் நான் கேட்ட கேள்விக்குப் பதில் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, இந்தக் குழுவின் பரிந்துரை மூலம் 22 ஆயிரம் பேர்கள் பயன்பெற இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சீர்திருத்தப் பள்ளிகள்.

*** 196. வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே :** மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்திருத்தப் பள்ளிகளில் தற்போது பணிபுரியும் ஆசிரியர்கள் எண்ணிக்கை என்ன ?

1975 மார்ச் 5]

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:

பதவி வகைகள்.	பதவிகள் எண்ணிக்கை.
1. தலைமையாசிரியர்கள் (உயர்நிலைப்பள்ளி பிரிவு-1) (நடுநிலைப்பள்ளிப் பிரிவு—6)	7
2. பி.டி. ஆசிரியர்கள்	3
3. மாணவர் இல்லக்காப்பாளர் உட்பட (இடைநிலைத்தர ஆசிரியர்கள்) பாலர்பள்ளி ஆசிரியர்கள்	89
4. தமிழ் ஆசிரியர்கள், நிலை 1	6
5. உடற்பயிற்சி ஆசிரியர்கள்	14
6. ஓவியப்பயிற்சி ஆசிரியர்கள்	5
7. உயர்தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்	29
மொத்தம்	153

திரு. கே. எ. வகாப்: இப்படிப்பட்ட அப்ரூவ்டு ஸ்கூல்களில் பி. டி. ஆசிரியர்கள் குறைவாக இருக்கிறார்கள். ராணிப்பேட்டையில் அமைச்சர் அவர்களே பார்த்திருக்கிறார்கள். பி.டி. ஆசிரியர்கள் செய்கிற சாதனை அவர்களுக்கே தெரியும். ஆகவே, பி. டி. ஆசிரியர்களை அதிகமாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: கல்வி சட்ட முறைப்படி கல்வி சட்டத்தை வழுவாத வகையிலே புறநகர்ப் பகுதிகளிலும், நகரப் பகுதிகளிலும் பி. டி. ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். உறுப்பினர் அவர்கள் கூறியது போல் பி. டி. ஆசிரியர்கள் போதவில்லை என்ற புகார் எதுவும் அரசுக்கு வரவில்லை.

திரு. எம். சுரேந்திரன்: சீர்திருத்தப் பள்ளிகள் எவ்வளவு இருக்கின்றன? அதிலே எவ்வளவு மாணவர்கள் இருக்கிறார்கள். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இருக்கிற விகிதாசாரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : கேள்வி ஆசிரியர்களைப் பற்றியது என்றாலும் உறுப்பினர் அவர்களுடைய சந்தேகத்தைத் தீர்க்க முற்படுகிறேன். தமிழ்நாட்டில் அரசுத் துறையின்மூலம் நேரடியாக நடை பெறுகிற பள்ளிகள் 6; தனியார் துறைப் பள்ளிகள் 14. இதிலே செங்கற் பட்டு மாவட்டத்திலே நடைபெறுகிற சீர்திருத்தப் பள்ளிகள் இரண்டில் மாணவர்கள் முறையே 689, 381 ஆகும். அரசினர் இளநிலைப் பள்ளி, ராணிப் பேட்டையில் 574 மாணவர்கள்; தஞ்சையில் 640 பேர்கள்; கடலூரில் 47 மாணவர்கள்; அரசினர் முதுநிலை, இளநிலை சீர்திருத்தப்பள்ளி சென்னையில் 301. இதற்காக அரசாங்கத்திலிருந்து செலவு செய்யப்படுகிற தொகை சென்னை 9,89,000 ரூபாய், செங்கற்பட்டு 5,85,000 ரூபாய்; ராணிப்பேட்டை 6,17,000 ரூபாய், தஞ்சை 8,31,000 ரூபாய். கடலூரில் மாணவர்களுடைய மொத்த சதவிகிதத்தின் அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது. சரியான எண்ணிக்கை விவரம் இல்லை. இது போலவே தனியார் நடத்தும் பள்ளி களுக்கும் அரசு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

புளிய மரங்கள் வளர்ப்பு.

* 197 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் புளிய மரங்களை அதிகம் பயிரிடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : 1975-76 ஆம் ஆண்டு 696 ஹெக்டர் பரப்பளவில் புளிய மரங்கள் வளர்க்கும் திட்டம் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : நமது மாநிலத்திற்குத் தேவையான புளி கிடைக்காமல் பெரும்பாலும் கர்நாடகத்திலிருந்தும் கேரளத்திலிருந்தும் கொண்டு வரப்படுவதாகச் சொல்கிறார்கள். இந்தக் குறையைப் போக்க அரசினர் நெடுஞ்சாலையின் இரண்டு பக்கங்களிலும் புளிய மரங்களை வைத்தால் வடலூர் இராமலிங்க அடிகளார் கூறியதுபோல் கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே' என்றது போல் நிழல் கிடைப்பதோடு புளியும் தேவையான அளவு கிடைக்குமாதலால் அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா?